17. நடத்தப்படும் பாடங்கள்:

| | |
|---|---|
| ★ இளநிலை தமிழ் | -- B.A., (Tamil) |
| ★ இளநிலை ஆங்கிலம் | -- B.A., (English) |
| ★ இளநிலை கணிதம் | -- B.Sc., (Maths) |
| ★ இளம் வணிகவியல் | -- B.Com., |
| இளம் வணிகவியல் (கணினி பயன்பாடு) | -- B.Com., (CA) |
| இளம் வணிக நிர்வாகவியல் | -- B.B.A., |
| முதுநிலை கணிதம் | -- M.Sc., (Maths) |
| முதுநிலை வணிகவியல் (கணினி பயன்பாடு) | -- M.Com., (CA) |
| எம்.ஃபில்., (பொருளியல்) | -- M.Phil., (Eco) |

★ (மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டது)

**கல்வித்தகுதி:**

அனைத்து இளநிலை மற்றும் முதுநிலை பாட வகுப்புகளுக்கும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கல்வித்தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.

18. விண்ணப்பதாரர்கள் சேர்க்கையின்போது கீழ்காணும் சான்றிதழ்களில் மூன்று ஒளிப்படி நகல்கள் (ஜெராக்ஸ் காப்பி) சமர்ப்பிக்க வேண்டும்.

அ) மேனிலைப்பள்ளி மதிப்பெண் பட்டியல் அல்லது தகுதியுடைய தேர்வுச் சான்றிதழ்

ஆ) இறுதியாக படித்த கல்வி நிறுவனம் வழங்கிய மாற்றுச் சான்றிதழ் மற்றும் நடத்தைச் சான்றிதழ்

இ) சாதிச்சான்றிதழ் : மிகவும் பிற்படுத்தப்பட்ட (MBC / DNC), பிற்படுத்தப்பட்ட (BC), பிற்படுத்தப்பட்ட முஸ்லிம் (BCM), பட்டியல் இனத்தவர் (SC), பட்டியல் இனத்தவர் அருந்ததியர் (SCA), பழங்குடியினத்தவர்கள் (ST)

ஈ) கடவுச்சீட்டில் ஒட்டும் அளவிலான இரு நிழற்படங்கள். மற்றும் அனைத்து மூலச் சான்றிதழ்களையும் சேர்க்கையின்போது அளிக்க வேண்டும்.

19. மாணவர் சேர்க்கை தொடர்பான விபரங்களை கல்லூரி இணையதளத்தில் தெரிந்துகொள்ளலாம்.

**Web:www.apcac.edu.in**

20. **மாணவர்கள் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை கல்லூரி இணைய தளத்தில் பூர்த்தி செய்து பின்னர் பதிவிறக்கம் செய்து உரிய இணைப்புகளுடன் இளநிலை பாடவகுப்புகளுக்கு ரூ.50/- ம், முதுநிலை பாடவகுப்புகளுக்கு ரூ.60/ம் மற்றும் எம்.ஃபில் (பொருளியல்) பாடவகுப்புக்கு ரூ.205/- ம் விண்ணப்பக் கட்டணமாக**

**" The Secretary, Arulmigu Palaniandavar College of Arts and Culture", Payable at Palani. என்ற முகவரிக்கு வங்கி வரைவோலையாகவோ அல்லது கல்லூரி அலுவலகத்தில் நேரிலோ செலுத்தி விண்ணப்பிக்கலாம்.**

| *21. கட்டண அட்டவணை:* | நேரில் | அஞ்சல் |
|---|---|---|
| 1. விண்ணப்பப் படிவம், தகவல் தொகுப்பு, இளங்கலை நேரில் பெறும்போது | 45.00 | 75.00 |
| 2. முதுகலை நேரில் பெறும்போது | 55.00 | 85.00 |
| 3. எம்.ஃபில் (பொருளியல்) | 200.00 | 230.00 |
| பதிவுக் கட்டணம் | 5.00 | 5.00 |

| | B.A., B.Sc., B.Com., B.B.A., | B.Com., (C.A) | M.Com (C.A) | M.Sc., (Maths) | M.Phil., (Eco) |
|---|---|---|---|---|---|
| சேர்க்கைக்கட்டணம் | 10 | 10 | 10 | 10 | 100 |
| கல்விக்கட்டணம் | 6000 | 6000 | 7000 | 7000 | 9000 |
| சிறப்புக்கட்டணம் | 440 | 440 | 440 | 440 | 520 |
| ஆய்வகக்கட்டணம் | --- | 2500 | 2500 | --- | --- |
| நுழைவுக்கட்டணம் | 300 | 300 | --- | --- | --- |
| பட்டமளிப்பு விழா | 25 | 25 | 25 | 25 | --- |
| மதிப்பெண் சரிபார்ப்பு | 50 | 50 | --- | --- | --- |
| மொத்தம் | 6825 | 9325 | 9975 | 7475 | 9620 |
| அடையாள அட்டை | 50 | 50 | 50 | 50 | 50 |

22. விடுதி வசதி உண்டு. விடுதிக் கட்டணம் தொடர்பான விபரங்களுக்குக் கல்லூரி முதல்வரை அணுகவும்.

பிற பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழக தகுதிக்கட்டணம் மற்றும் அங்கீகாரக் கட்டணமாக ரூ. **2115/-** கூடுதலாக செலுத்த வேண்டும்.

# அருள்மிகு பழனியாண்டவர் கலை–பண்பாட்டுக் கல்லூரி பழனி.

**(தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் மறுமதிப்பீட்டில் 'A' தரம் பெற்றது)**

(தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் உள்ள பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிர்வாகத்தால் நடத்தப்படும் கல்வி நிறுவனம்)

**பழனி – 624 601.**

திண்டுக்கல் மாவட்டம், தமிழ்நாடு.

✆ (O) 04545 - 251288, (P) 251930 / Fax : 04545 - 251375.

Web:www.apcac.edu.in

E-mail: apacac_men@yahoo.co.in



## சுயநிதிப்பிரிவு - பாட வகுப்புகள்

(மாலை நேர வகுப்புகள்)

# தகவல் தொகுப்பு

## 2019 - 2020

| | |
|---|---|
| ★ இளநிலை தமிழ் | -- B.A., (Tamil) |
| ★ இளநிலை ஆங்கிலம் | -- B.A., (English) |
| ★ இளநிலை கணிதம் | -- B.Sc., (Maths) |
| ★ இளம் வணிகவியல் | -- B.Com., |
| இளம் வணிகவியல் (கணினி பயன்பாடு) | -- B.Com., (CA) |
| இளம் வணிக நிர்வாகவியல் | -- B.B.A., |
| முதுநிலை கணிதம் | -- M.Sc., (Maths) |
| முதுநிலை வணிகவியல் (கணினி பயன்பாடு) | -- M.Com., (CA) |
| எம்.ஃபில்., (பொருளியல்) | -- M.Phil., (Eco) |

★ (மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டது)

**இருபாலரும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.**

அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்கள் ஆட்சிக்குழுவின் தலைவராகவும், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் இணை ஆணையர் / செயல் அலுவலர் அவர்கள் தாளாளராகவும், துணை ஆணையர் இக்கல்லூரியின் செயலராகவும் செயல்பட்டு வருகின்றனர்.

பழனி முருகன் அருளால் இக்கல்லூரியில் கற்பிக்கும் கல்வி மற்றும் கல்விசாரா செயல்பாடுகள் அனைத்திலும் வெற்றி பெற்று மாணவர் சிறப்படைகின்றனர்.

கல்லூரியில் அரசுஉதவி பெறும் பாட வகுப்புகளில் இடம் கிடைக்காத மாணவ மாணவியர் குறைந்த செலவில் படித்து பட்டம் பெறுவதற்கான வாய்ப்பைப் பழனி வட்ட மாணவ மாணவியர் பெற வேண்டுமென்ற சீரிய நோக்கோடு நிர்வாகம் 2002-2003 ஆம் கல்வி ஆண்டு முதல் மாலை நேர வகுப்புகள் சுயநிதி அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது.

பகல் நேரக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கும், மாலை நேரக் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியருக்கும் பாடத்திட்டம், தேர்வுகள் மற்றும் வழங்கப்பெறும் பட்டம் ஆகியவற்றில் எவ்வித வேறுபாடுமில்லை.

## விண்ணப்பதாரர்கள் செயல்பட வேண்டிய முறைகள்:

1. **சுயநிதிப்பாடப்பிரிவு 2019-2020 ஆம் கல்வியாண்டு முதல் சுழற்சி முறையில் (Shift System) வகுப்புகள் நடைபெறும்.**

(நேரம்: பிற்பகல் 1.15 முதல் மாலை 6.15 மணிவரை)

2. மாணவர்கள் ஒவ்வொரு பாடப்பிரிவுக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.
3. விண்ணப்பதாரர்களே விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும்.
4. கடவுச்சீட்டு அளவு புகைப்படம் (பாஸ்போர்ட் சைஸ்) ஒன்று விண்ணப்பத்தில் ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் ஒட்ட வேண்டும். அதே அளவில் மூன்று புகைப்படங்கள் கல்லூரியில் சேரும்போது கொடுக்க வேண்டும்.
5. பாடப்பிரிவைத் தெளிவாக எழுத வேண்டும்.
6. மேல்நிலைப் பள்ளிச் (+2) சான்றிதழ்களில் குறிப்பிட்டவாறு பிறந்த தேதியைக் குறிப்பிட வேண்டும்.
7. சரியான மதிப்பெண்களையே விண்ணப்ப தாரர்கள் விண்ணப்பங்களில் குறிக்க வேண்டும். பரிசீலனைக்குப் பின் சரியான மதிப்பெண்கள் குறிக்கப்படவில்லை என்று தெரிய வந்தால்

அ) விண்ணப்பதாரர் இக்கல்லூரியில் சேரும் தகுதியை இழப்பார்.

ஆ) அடுத்த மூன்றாண்டுகளுக்கு அவர் படிக்க முடியாதபடி தடை செய்யப்படுவார்.

இ) தவறான மதிப்பெண்களைக் குறிப்பிட்டால் அவர்மீது சட்டப்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

8. தேவையான விவரங்கள் கொடுக்காத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.
9. இக்கல்லூரியில் மாணவர்சேர்க்கை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தால் உறுதி செய்யப்பட வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு மாணவர்கள் மதுரை காமராசர் பல்கலைக் கழகச் சட்ட விதிகளுக்கு ஒப்புடையதான விவரங்களைத் தரவேண்டும். அவர்களுடைய தகுதிகளும், சான்றிதழ்களும் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.
10. மாணவர் சேர்க்கை முடிந்தவுடன் கல்விக் கட்டணத்தையும் மற்ற கட்டணங்களையும் அன்றே கல்லூரி அலுவலகத்தில் செலுத்த வேண்டும். அவ்வாறு சரியான நேரத்தில் கட்டணம் செலுத்த தவறும் விண்ணப்பதாரர்களின் சேர்க்கை அனுமதி ரத்து செய்யப்படும்.
11. **சேர்க்கை பெற்ற மாணவர்கள் எந்த ஒரு காரணங்களுக்காகவும் கல்லூரியை விட்டு விலகினால் கட்டணங்கள் திருப்பித்தரமாட்டாது.**
12. பட்டப்படிப்பிற்கு எந்தக் கல்வியாண்டில் விண்ணப்பிக்கிறார்களோ அந்த கல்வி ஆண்டில் விண்ணப்பதாரரின் வயது ஜூலை 15ம் தேதியன்று 16 வருடம் 6 மாதம் நிறைவடைந்திருக்க வேண்டும்.
13. இக்கல்லூரியின் சேர்க்கையின் போது கல்வி மாற்றுச் சான்றிதழ்களைக் (TC) கல்லூரி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். அதன்பின் பழைய மாற்றுச் சான்றிதழ்கள் திருப்பித் தரப்படமாட்டாது.
14. மாணவர்சேர்க்கைக்கு வரும் விண்ணப்பதாரர்கள் தங்களுடைய பெற்றோருடன் வர வேண்டும். பெற்றோர் இல்லையெனில் பாதுகாப்பாளருடன் வரவேண்டும். இல்லாவிட்டால் மாணவர் சேர்க்கைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.
15. மாணவர்களைக் கேலியோ கிண்டலோ (ராக்கிங்) செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. இதை மீறும் மாணவர்கள் அரசு ஆணைப்படி தண்டிக்கப்படுவார்கள்.
16. 2008 - 2009 கல்வி ஆண்டுமுதல் CBCS அடிப்படையிலான பாடத்திட்டம் பின்பற்றப் படுகிறது.